STC.No. 1473/2022
நாள் 22.01.2026.
P.W.3 – (பாலதுரைகண்ணன்)
புகார்தாரர் ஆஜர். எதிரி ஆஜர்.
எதிரி தரப்பில் **குறுக்கு விசாரணை**

எனக்கு சாட்சியம் அளிக்க நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வரவில்லை என்றால் வந்துள்ளது. ஆனால் திருப்பப்பட்டுள்ளது. நீதிமன்ற அழைப்பாணை திரும்பப்பட்டது புகார்தாரர் சொல்லி தான் தெரியும், நான் பொறியியல் படித்துள்ளேன். நான் தற்போது பிராஜக்ட் கன்சல்டன்ஸ் ஆக வேலை பார்க்கிறேன். புகார்தாரரின் வழக்கறிஞர் திரு. சரவணபெருமாளை தெரியுமா என்றால் தெரியாது. சங்கீதா என் முன்னாள் மனைவி அவருக்கு எதிராக நான் ஓ.பி.எண்.4/2017 தாக்கல்செய்து 13.09.2021 அன்று விவகாரத்து ஆனது என்றால் சரி. அந்த வழக்கில் என் வழக்கறிஞர் சரவணபெருமாள் என்றால் நான் லட்சுமணன் என்ற வழக்கறிஞரிடம் வழக்கு கொடுத்தேன். நான் என் மனைவிக்கு எதிராக சிவகாசி உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.24/2017 தாக்கல் செய்திருந்தேன் என்றாலும் அந்த வழக்கிலும் வழக்கறிஞர் ஆர். சரவண பெருமாள் என்றால் எனக்கு அந்த விபரம் தெரியவில்லை.

என் நிருபண வாக்குமூலத்தை திருவில்லிபுத்தூர் அம்மன் கோவில் அருகே தட்டச்சர் நான் விபரம் சொல்லி தட்டச்சு செய்தார் நான் அதனை சரிபார்த்தேன். புகார்தாரர் வீட்டு முகவரி சொல்ல முடியுமா என்றால் முகவரி தெரியாது. புகார்தாரர் வீடு மடவார் வளாகம் நுழைவு வாயில் அருகே உள்ளது. எந்த திசையை பார்த்து உள்ளது என்றால் எனக்கு தெரியாது. என் நிருபண வாக்குமூலத்தில் கட்டுமானம் செய்வதற்கு புகார்தாரர் எதிரிக்கு பணம் கொடுத்ததாக சொல்லியுள்ளதுபோல் புரோநோட்டில் விபரம் குறிப்பிட்டு புரோநோட்டு எழுதப்பட்டதா என்றால் கன்ஸ்டரக்சன் டெவலப்மண்ட் என்று சொல்லிதான் எதிரி பணம் வாங்கினார்.

முதலில் கையொப்பம் செய்தது கார்த்திகேயன், இரண்டாவது நான் கையொப்பம் செய்தேன். மூன்றாவது கையொப்பம் செய்தது முத்துபாரத் என்பவர். எதிரி கையொப்பம் செய்து கொடுத்த பேனாவை வைத்துதான் கையொப்பம் செய்தேனா என்றால் இல்லை. நான் எந்த நிற மையில் கையொப்பம் செய்தேன் கார்த்திகேயன் எந்த நிற மையில் கையொப்பம் செய்தார் முத்துபாரத் எந்த நிற மையில் கையொப்பம் செய்தார் என்றால் நினைவில்லை. பு.சா.ஆ.1 புரோநோட்டில் எழுதப்பட்ட விபரம் மற்றும் கையொப்பங்கள் வெவ்வேறு பேனா மையால் உள்ளது என்றால் சரி. பு.சா.ஆ.1 புரோநோட்டில் எழுதிய எழுத்துகள் ஒன்றின் மேல் ஒன்று எழுதப்பட்டதாக காணப்படுகிறது என்றால் இல்லை. பு.சா.ஆ.1 புரோநோட்டு பின்னிட்டு வழக்கிற்காக பல்வேறு தேதிகளில் உற்பத்தி செய்யப்பட்டது என்றாலும் நான் அதனை அனுசரித்து பொய் சாட்சியம்

அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

நான் என் நிருபண வாக்குமூலத்தில் எனக்கு சொந்த வீடு உள்ளதாக குறிப்பிட்டுள்ள இடத்தில் என் சொந்த வீடு எங்கு உள்ளது என நான் சொல்லவில்லை என்றால் 2 வது பத்தியில் சொல்லவில்லை. என் வீட்டின் முகவரி வாக்குமூலம் ஆரம்பத்தில் குறிப்பிட்டுள்ளேன். நான் என் நிருபண வாக்குமூலத்தில் எதிரி எனக்கு பழக்கம் என குறிப்பிட்டுள்ளதால் எதிரியின் போன் நம்பர், வீட்டு முகவரி என்னால் சொல்ல முடியுமா என்றால் எதிரியை நான் 3,4 முறை பார்த்துள்ளேன். அவர் போன் நம்பர் என் பழைய போனில் உள்ளது. பொதுவாக, நெருங்கிய உறவினர் மற்றும் நெருங்கிய நண்பர்களுக்காகதான் சாட்சி கையெழுத்து செய்வார்கள் என்றால் அப்படி இல்லை. அந்த கால கட்டம் கொரோணா காலகட்டம் என்பதால் நான் சொல்வதுபோல் சந்தித்து கடன் கொடுத்து பெற வாய்ப்பில்லை என்றாலும் நான் சொன்னதுபோல் சொன்ன இடத்தில் கையொப்பம் செய்யவில்லை என்றாலும், என் வழக்கில் ஆஜரான வழக்கறிஞருக்காகவும், இந்த புகார்தாரருக்காகவும் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. என் சொந்த வீடு குறித்தும் என் விலாசம் குறித்தும் நான் ஆவணங்கள் ஏதும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆம். கேட்டால் சமர்ப்பிக்கிறேன்.

புகார்தாரர் எவ்வாறு பணம் கொடுத்தார் அவருக்கு பணம் எந்த வகையில் வந்தது என எனக்கு தெரியாது என்றால் ஆம். சாட்சி ரூ.500/– தாள் கட்டு கொடுத்ததாக தெரிவித்தார். காசோலை சம்மந்தமான விபரங்கள் எனக்கு தெரியாது என்றால் ஆம். புரோநோட்டு மற்ற சாட்சிகள் எனக்கு தெரியாது என்றால் அன்றைய தேதியில் என்னிடம் காண்பித்தார்கள் என்னை பேருந்து நிலையத்தில் இருந்து பிக்அப் செய்தார்கள். நான் தற்போது சொன்ன விபரங்களை என் நிருபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் பஸ்ஸ்டாண்ட் என குறிப்பிட்டு சொல்லவில்லை, நாங்கள் நால்வர் என சொல்லியுள்ளேன். நான் என் நிருபண வாக்குமூலம் பக்கம் 2, வரி 8 ல் மற்றும் ஒருவர் என சொல்லியுள்ளேன் என்றால் சரி. நால்வர் பெயர் பின்னர் குறிப்பிட்டு இருக்கிறேன். கார்த்திகேயன் வந்தததாக நான் இந்த வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை விரைவு நடுவர்,
திருவில்லிபுத்தூர்.